9th March 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பரிசீலிக்க வேண்டிய விஷயம்.

மாவட்ட விவரச் சுவடிகளை வெளியிடுதல்

*184 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்ட நில இயல் தகவல் ஏடுகளை (District Gazetteer) புதியனவாக வெளியிடும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : ஆம்.

திரு. அ. ப. அழகமுத்து : இப்பொழுது எந்தெந்த மாவட்டங்களுக்கு இந்தத் தகவல் ஏடுகள் இருக்கின்றன ? அப்படி இல்லாத மாவட்டங்கள் எத்தனை ?

கனம் திரு வெ. ராமையா : எல்லா மாவட்டங்களுக்கும் இருக்கிறது. ஆனால், இப்பொழுது சமீபத்தில் நாம் இந்த 'கெஸட்டியர்ஸை' புதுப்பிக்கவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு, ஒரு சில ஜில்லாக்களில் வேலை பூர்த்தி ஆகியிருக்கிறது. தஞ்சை, தென் ஆற்காடு, மதுரை, கோவை ஆகிய ஜில்லாக்களில் இவைகளைப் புதுப்பிக்கும் வேலை பூர்த்தியாகி விட்டது. மற்ற மாவட்டங்களின் 'கெஸடியர்ஸை' புதுப்பிப்பதற்கு வேண்டிய முறையில் அது சம்பந்தப்பட்ட இலாகா எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டு வருகின்றது.

Location of Steel Plant in the State

* 185 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the names of countries to which the samples of Salem Iron Ore and the Neyveli Lignite were sent for investigation;

(*b*) the present stage of these investigations; and

(*c*) when a final decision is expected to be taken regarding the location of the steel plant in Madras State?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The samples of Neyveli-Salem raw materials were sent to Norway, Sweden, German Democratic Republic, Federal Republic of Germany and the United States of America for various tests.

(*b*) Most of the process tests have been completed and reports received by Government. Certain tests by concentration equipment suppliers are now in progress. These tests are now in a fairly advanced stage and done for guarantee of equipment to be offered by the various manufacturers.

(*c*) A final decision on the plant location will be taken by the Government of India.

[9th March 1964

திரு. ஜே. மாதா கவுடர் : பல அயல்நாடுகளுக்கு இது அனுப்பப் படுகிறது. எந்த நாட்டுக்காரர்களாவது இதைப் பரிசிலனை செய்து அதைப்பற்றி முடிவு சொல்லியிருக்கிறார்களா? ஏதாவது ஒரு நாடு முடிவு சொல்லியிருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒவ்வொரு நாடும் சொல்லி யிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : பழுப்பு நிலக்கரியை நெய்வேலியில் அப்படியே எடுத்து இரும்பு ஆலையிலே உருக்குவதற்கு உபயோ கிக்கலாம் என்று ஒரு நாடு சொல்லியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அமெரிக்க நாட்டில் அந்த விதத்தில் பைலட் டெஸ்ட் நடத்தி, அவ்வாறு 'ரா லிக்னைட்' உபயோகப்படுத்த முடியும் என்று அவர்கள் சொல்லியிருக் கிறார்கள்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தப் பரிசீலனை தொடங்கி இப் பொழுது எத்தனை நாட்கள் ஆகின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : குறைந்தது நான்கு ஆண்டுகள் இருக்கும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : 'ரா லிக்னைட்டைக்' கொண்டு இரும்பு உற்பத்தி செய்ய முயற்சி செய்தால் லிக்னைட்டை நீண்ட தொரு தூரத்திற்கு எடுத்துச் செல்ல முடியாது என்பது உண்மையா? ஆகையினால், லிக்னைட்டை வேறு மாதிரியாக பக்குவப்படுத்தினால்தான் இதனை நீண்ட தூரத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்று கூறுவது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி 'ஸயன்ஸ்' பற்றிய கேள்வி. அட்மினிஸ்டிரேஷனைப்பற்றி இல்லை. இருந்தா லும் சொல்லுகிறேன். லிக்னைட் சீக்கிரம் தீப்பிடித்துக்கொள்ளக் கூடிய பொருள். அதை 'கார்பனைஸ்' பண்ணி சுட்டுக் கரியாக்கி அச்சுக்களாகச் செய்தால் தீ பிடிக்காது. 'ரா லிக்னைட்' வெளியே எடுத்துச்செல்ல வேண்டியதில்லை, எந்த இடத்தில் வெளியே போட் டிருந்தாலும், தீ பிடித்துக்கொள்ளக்கூடும்.

திரு. செ. மாதவன் : கனம் அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்கார் முடிவு செய்யும் என்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் உருக்கு ஆலை எங்கே வைப்பது என்று இடத்தைப் பற்றி மத்திய சர்க்கார் முடிவு செய்யுமா? அல்லது தமிழ் நாட்டிற்கு உருக்கு ஆலை வருமா, வராதா என்பதைப்பற்றி மத்திய சர்க்கார் முடிவு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தமிழ் நாட்டிற்கு உருக்கு ஆலை உண்டு என்ற முடிவு மூன்றாவது ஐந்தாண்டு திட்டதிலேயே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் மூன்றாவது

9th March 1964]

ஐந்தாண்டுத் திட்டத்தைப் படித்துப் பார்த்தால், அதில் இதற்காக ரூ. 25 கோடி ஒதுக்கியிருப்பதைப் பார்க்கலாம். ஆனால், எந்த முறையிலே செய்வது ('ப்ராஸெஸ்'), எந்த இடத்திலே வைப்பது என்பதைப்பற்றியெல்லாம் நிபுணர்கள் முடிவு சொல்ல வேண்டியது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நம்முடைய அமைச்சர் அவர்கள் லிக்னைட்டைப் பக்குவப்படுத்தாமல் வெளியே எடுத்துப் போட்டு வைத்தால்கூட தீ பிடித்துக்கொள்ளக்கூடும் என்று சொன்னார். லிக்னைட்டை 'பிரிக்கட்டிங்' செய்வதற்கு செலவு எவ்வளவு ஆகும்? நெய்வேலியிலிருந்து நிலக்கரியை எடுத்துச் செல்லுவது என்றால், எவ்வளவு டன் கரியை பிரிக்கெட் செய்யவேண்டும், அதற்கான செலவு எவ்வளவு ஆகும், அதைத் தவிர்ப்பதற்காக அங்கு எடுத்துச் செல்லாமல், நெய்வேலியிலேயே இரும்புத் தொழிற்சாலையை வைப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த விஷயங்களையெல்லாம் நிபுணர்கள் பரிசீலித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதை நிச்சயம் பரிசீலனை செய்வார்கள்.

திரு. ஏ. ஆறுமுகம் : சேலம் இரும்புத் தொழிற்சாலை எப்பொழுது நம் நாட்டில் ஆரம்பிக்கப்படும் ?

கனம் சபாநாயகர் : இவ்வளவு நேரம் அதைத் தான் அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஒரு கனம் அங்கத்தினர் நெய்வேலியில் வைக்கவேண்டுமென்று சொன்னார். கனம் அங்கத்தினர் திரு. ஏ. ஆறுமுகம் சேலத்தில் வைக்கவேண்டும் என்று கேட்பார்கள் என்று எதிர்பார்த்தேன்.

ஆதனூரில் மண்ணெண்ணெய் வளம்

* 186 கேள்வி.—**திரு. எஸ். மணி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

• திருச்சி மாவட்டம், பேரம்பலூர் வட்டம், ஆதனூருக்கு அண்மையில் மண்ணெண்ணெய் கிடைப்பது உண்மையா ? விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

திரு. எஸ். மணி : திருச்சி மாவட்டத்தில் ஆதனூருக்கு அருகாமையில் புதைபொருள் ஆராய்ச்சியாளர் 1957-ல் கண்டுபிடித்து, அவர்கள் மத்திய சர்க்காரிலிருந்து ரூ. 2,000 பொறுமான கட்டிடத்தையும் கட்டி வைத்திருப்பது உண்மையா ? 75 அடி நீளம் உள்ள மரம் கல்லாக மாறிவிட்டது என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர் சொல்லுகிறார்கள். அதைப் பார்த்து பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த இடத்தில் புதைபொருள் ஆராய்ச்சி நடந்தது. ஆராய்ச்சி நடத்தித்தான் அந்த இடத்தில் எண்ணெய் இருப்பதாகத் தெரியவில்லை என்று கூறினேன்.